ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2449/42 - 2025 අගෝස්තු මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.08.14

2449/42 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: DSM/YT/LAND/5/44.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் குறிப்பு இல.: 4-3/5/2018/HA/155.

கலகம கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தின் யடவத்த பிரதேச செயலாளர் பிரிவில் அஸ்கிரி பல்லேசிய பத்துவ எனும் சிறு பிரிவின் இல. E332, கலகம கிராம அலுவலர் பிரிவில், கலகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமை அதிபதி யின் காணி அளவை வரைபடம் இல. 1845 இன் துண்டு இல. 01 இல் குறிப்பிடப்பட்ட கஹவத்த எஸ்டேட்/ ஹேன முகலான எனும் காணியின் 0.0207 ஹெக்டயார் விஸ்தீரணத்தினைக் கொண்ட காணித் துண்டாகும்.

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: கஹவத்த எஸ்டேட்/ ஹேன முகலான; விபரம்: கலகம கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் அலுவலகத்தினை நடாத்திச் செல்வதற்காக காணியினை எடுத்தல்; உரிமை கோரு பவர்: 1. டபிள்யூ. எம். ஆர். வசந்த குமார விஜேசூரிய, 36/2, உருலேவத்த, யடவத்த; விஸ்தீரணம்: 0.0207 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக

2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யடவத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். எம். சி. பி. ஹிந்தகொட,
பிரதேச செயலாளர்,
யடவத்த.

பிரதேச செயலகம்,
யடவத்த,
2025, ஓகத்து 05.

EOG 08 - 0148

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: EMDS/LND/05/ACO/02/04/03.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின்
இல.: LD/05/2007/IR/538.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2409/03 ஆம் 2024, நவெம்பர் 04 ஆந் திகதி திங்கட்கிழமை அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் தொடர்பானது.

அந்த அறிவித்தலின் இரண்டாம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழு தொகையின் 15.1985 ஹெக்டயார் கீழ் குறிப்பிட்டவாறு முழு தொகையின் 35.1985 ஹெக்டயார் ஆக திருத்தப்படவேண்டும் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

விஷாகா புபுதினி பீட்டர்ஸ்,
பிரதேச செயலாளர்,
எம்பிலிபிட்டிய.

பிரதேச செயலகம்,
எம்பிலிபிட்டிய,
2025, யூலை 30.

EOG 08 - 0149

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ஒல 8/ஹா. லே.
உமது இல.: J/73/HA/109.

இல. 151 மற்றும் 1975, பெப்புருவரி 14 ஆந் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையுடன் தொடர்பானது.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் பலப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இல. 20 பீ பிறாக்மணவத்த தெற்கு கிராம அலுவலர் பிரிவில், பிறாக்மனவது கொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அ. வ. கா. 737 மற்றும் 1975.01.09 ஆந் திகதியிடப்பட்ட அடிப்படை வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள, சுமார் 1 றூட், 24.2 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய தேவால பிட்டியவத்த எனும் காணி, பிரதேச உப அரசாங்க அதிபர் கட்டிடத்தை கட்டுமானம் செய்வதற்கு காணி எடுத்தல்.

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தேவாலபிட்டியவத்த (வரிப்பண இலக்கம் 67 இல் ஒரு பகுதி); விபரம்: வீட்டுத்தோட்டம், 40 - 50 இற்கு இடையிலான வயதுள்ள 5 தென்னை மரங்களும் ஈரப்பலா மரம் ஒன்றும் கட்டுவேலை செய்யப்பட்ட கிணறும் உள்ளன; விஸ்தீரணம்: 0 ஏக்கர், 1 றூட், 24.2 பேர்ச்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலபிட்டி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஏ. ஷாலிகா நில்மினி,
பிரதேச செயலாளர்,
பலபிட்டி.

பிரதேச செயலகம்,
பலபிட்டி,
2025, ஓகத்து 04.

EOG 08 - 0150